# அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட மயிலிட்டி பிரதேசத்தில் காணப்படும் மரபுரிமைச் சின்னங்களின் நிலை – ஓர் ஆய்வு

**திருச்செல்வம், நி. , புஸ்பரட்ணம், ப.**
வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
thiruselvamthiru524@gmail.com

*மரபுரிமை என்பது ஓர் இனத்தினுடைய தனித்துவத்தினை அடையாளப்படுத்திக் காட்டும் விலைமதிக்க முடியாத சொத்து ஆகும். இது கடந்தகால மக்களுக்கும் நிகழ்கால மக்களுக்கும் இடையிலான ஊடகமாகச் செயற்பட்டு எதிர்காலத்தை தீர்மானிக்கவும் வழிநடாத்தவும் உதவுகின்றது. ஈழத்தமிழர்களின் மரபுரிமை அம்சங்கள் தனித்துவம் வாய்ந்தவையாக காணப்படுகின்றன. ஈழத்தில் ஏற்பட்ட முப்பது ஆண்டு கால யுத்தத்தினால் ஈழத்தமிழரின் மரபுரிமை அம்சங்கள் பல அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. அவ்வாறான மரபுரிமைகளில் அழிவினை சந்தித்த பிரதேசமாக மயிலிட்டி பிரதேசம் காணப்படுகின்றது. 1990 யூன் 15 ஆம் திகதி ஏற்பட்ட இடம் பெயர்வு காரணமாக இப் பிரதேசத்தில் பல மரபுரிமை அம்சங்கள் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. குறிப்பாக, மயிலிட்டி பிரதேச மானது வரலாற்று உதயகாலம் தொடக்கம் பல்லவர்காலம், சோழர்காலம், யாழ்ப்பாண இராச தானிகாலம், ஐரோப்பியர்காலம் என தொடர்ச்சியான வரலாற்றினை கொண்டமைந்த துறைமுக நகராக விளங்குவதால் இங்கு பல மரபுரிமைகள் காணப்படுகின்றன. இந்நிலை யில் மயிலிட்டியின் தொன்மை வரலாறு, இங்கு காணப்படுகின்ற மரபுரிமைச் சின்னங் கள், அழிடைந்த மரபுரிமைச்சின்னங்கள் போன்றவற்றினை ஆராய்ந்து அதன் ஊடாக மயிலிட்டி பிரதேசத்தின் தொன்மையினையும் தனித்துவத்தினையும் வெளிக்கொணர்ந்து எதிர்கால சந்ததியினருக்கு தெரியப்படுத்துவதை அடிப்படையாகக்கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்குரிய தரவுகள் நூல்களிலிருந்தும், சிதைவடைந்த மரபுரிமைச் சின்னங்கள், மீள் உருவாக்கப்பட்டுவரும் மரபுரி மைச் சின்னங்கள் என்பவற்றை ஆராய்ந்தும், மேலாய்வுகள் ஊடாகவும் மற்றும் மக்களுடனான நேர்காணல், கலந்துரையாடல், அவதானிப்பு போன்றவற்றினூடாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டன. மயிலிட்டிப் பிரதேசத்தினைப் பொறுத்தவரையில், யாழ்ப்பாண இராசதானிகாலத்தில் கட்டப்பட்ட ஆலயங்கள், ஆவுரஞ்சிக்கற்கள், ஐரோப்பியர்கால தேவாலயங்கள், புகையிரத பாதை எச்சங்கள், பாடசாலைகள், ஆயுதக்களஞ்சியசாலை, புழங்குபொருட்கள், பெருங்கற்கால சின்னங்கள், கலைகள் மற்றும் பழக்க வழக்கங்கள் போன்ற பல மரபுரிமைச்சின்னங்கள் அழிவடைந்துள்ளன. நீண்டகால இடைவெளியின் 2018 இன் பின்பு மீள் குடியேற்றப்பட்ட சூழலில் எஞ்சிக்காணப்படும் மரபுரிமை அம்சங்கள் மீளுருவாக்கப்பட்டும் வருகின்றன.*

**திறவுச்சொற்கள் :** மயிலிட்டி, மரபுரிமைகள், இடப்பெயர்வு, மீள்குடியேற்றம்.